23.09.2025 OS.No.35/2024 PW1 Name :.குமார்

குறுக்கு விசாரணை

1. நான் பிரதிவாதியின் கணவர் மீது அ.வ.எண். 36/2024 என்ற மற்றொரு வழக்கு போட்டுள்ளேன். அந்த வழக்கில் ஏற்கனவே நான் குறுக்கு விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன். அந்த சாட்சியத்தில் உஷ்மான் என்பவர் 2 சீட்டுகளும், முபாரத் அலி 2 சீட்டுகளும் சதாம் 2 சீட்டுகளும், சபீக் மற்றும் உஷ்மான் ஆகியோர்கள் 2 சீட்டுகளும் போட்டுள்ளதாக கூறியுள்ளேன். அவர்கள் அனைவரும் பிரதிவாதி தரப்பு ஆட்கள். அவர்களுக்கு சீட்டு பணம் கொடுத்ததாக கூறுவதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.
2. ஏற்கனவே நான் கூறிய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விஜயகுமார் வீட்டில் வைத்து வடகுப்பத்தில் கடனுறுதி சீட்டு எழுதியதாக கூறியுள்ளேன். பிரதிவாதி கொடுத்துள்ளதாக கூறும் கடனுறுதி சீட்டை கீதா என்பவர் எழுதியதாக கூறியுள்ளேன். சபீனா கடனுறுதி சீட்டை எழுதியபோது நானும் கீதா, அமுதா ஆகியோர்கள் தான் இருந்ததாக கூறியுள்ளேன். நான் சொல்ல சொல்லதான் 2 சீட்டுகளையும் கீதாவும் அமுதாவும் எழுதினார்கள். 2 கடனுறுதி சீட்டுகளும் 25.06.2022ல் எழுதபட்டது.
3. விஜயகுமாரும் கீதாவும் எனக்கு நீண்டநாட்களாக தெரிந்தவர்கள். அமுதாவும் எனக்கு நீண்டநாட்களாக தெரிந்தவர். நான் கேட்டுகொண்டதன் அடிப்படையில் தான் அவர்கள் சாட்சியாக கையெழுத்து போட்டார்கள். பிரதிவாதிகளுக்கு கொடுத்ததாக கூறும் தேதியில் என்னிடம் பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கு எழுத்து

மூலமான ஆவணம் இல்லை. கடனுறுதி சீட்டு தொடர்பான பிரிண்டு செய்ய தாள்களை நான்தான் எடுத்து சென்று எழுதுபவர்களிடம் கொடுத்தேன்.

4. கடனுறுதி சீட்டில் எழுதியவர் என்ற இடத்தில் யாரும் கையெழுத்து போடவில்லை. உண்மையில் கடனுறுதி சீட்டை நான்தான் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரூ.3,60,000/- கொடுக்கவேண்டும் என என்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கபட்டது. இன்றைய தேதிவரை அதை திருப்பி கொடுக்கவில்லை. அதன் பின்னர் தான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து இந்த வழக்கு போட்டேன். பிரதிவாதிகளுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ஏமாற்றவேண்டும் என்பதற்காக பிரதிவாதி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ஏமாற்றுவதற்காக காவல்நிலையத்தில் பொய் புகார் கொடுத்தார்.

5. புகாருக்கான சாட்சிகள் அவர்களிடம் இல்லை. சீட்டு பணத்தை நான் கொடுத்துவிட்டேன் என்பதை நிரூபித்தால் அவர்களுக்கு பாக்கி இல்லை என்பது தெரியும். அந்த ஆதாரங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தயாராக உள்ளேன். வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 23/09/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.09.23 16:18:31 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.